# நமது தின கனி
காலை நாளிதழ்
# NAMADHU DHINA KANI
Daily Morning

Vol: 01 | Issue: 295 | 4 Pages | 28.5.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur
மலர்: 01 | இதழ்: 295 | 4 பக்கங்கள் | 28.5.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்

## நாயாக மாறிய வாலிபரின் புதிய ஆசை



ஜப்பான், மே. 28


விலங்குகள் மீது சிலருக்கு அதீத அன்பு இருக்கும். அந்த வகையில் நாய்கள் மீது தீராத காதல் கொண்ட ஜப்பானை சேர்ந்த டோகோ என்ற வாலிபர் ரூ.12 லட்சம் செலவு செய்து நாயாக மாறிய காட்சிகள் சமீபத்தில் சமூக வலைதளங்களில் வைரலாகி இருந்தன.

இந்நிலையில் டோகோ தற்போது இன்னும் சில விலங்குகள் போல தன்னை மாற்றி கொள்ள ஆசைபடுவதாக தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவரது பேட்டி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. அதில் டோகோ கூறியிருப்பதாவது:

நாய்களுக்கும், மனிதர்களுக்கும் வெவ்வேறு எலும்பு அமைப்புகள் இருக்கும். கால்கள், கைகளை வளைப்பது என மனிதர்களில் இருந்து நாய்கள் மிகவும் வேறுபட்டு காணப்படுகின்றன. எனவே நாய் போல நடப்பது மிகவும் கடினம். நான் தற்போது என் கை, கால்களை நாய்களை போன்று மாற்றுவதற்கு வழிகளை ஆராய்ந்து வருகிறேன். பொதுவாக நாய்கள் அசுத்தமாகும் போது அவற்றின் ரோமங்களில் அழுக்கு படிந்து வருகிறது. அதனை சுத்தம் செய்ய அதிக உழைப்பு செலுத்த வேண்டி உள்ளது.

எனவே நான் நாயில் இருந்து வேறு ஒரு விலங்காக மாற ஆசைப்படுகிறேன். அது பாண்டா அல்லது கரடி, நரி, பூனை என வேறு ஏதேனும் ஒரு விலங்கு போல மாற ஆசை உள்ளது. பூனையும், நரியும் மிகவும் சிறியவை என்பதால் எதார்த்தத்தை உணரும் போது அது சாத்தியமில்லை என்று தோன்றுகிறது. நிச்சயம் ஏதாவது ஒரு நாள் எனது ஆசையை நிறைவேற்றுவேன் என கூறியுள்ளார்.

## நாய்களுக்கான பிரத்யேக விமான சேவை வழங்கும் பார்க் ஏர் டிக்கெட் எவ்வளவு தெரியுமா?



நியூ யார்க், மே. 28

நாய்கள் விமானம் பயணம் செய்வதற்கான புதிய ஆடம்பர விமான சேவை துவங்கப்பட்டுள்ளது. பார்க் ஏர் என அழைக்கப்படும் புதியவிமானசேவை மே 23 ஆம் தேதி துவங்கியது. நியூ யார்க்இன் வெஸ்ட்செஸ்டர் கவுண்டி விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட முதல் விமானம் லாஸ் ஏஞ்சல்ஸ் விமான நிலையத்தில் தரையிறங்கியது.

நாய் பொம்மைகளை விற்பனை செய்யும் பார்க் நிறுவனம் ஜெட் சார்டர் சேவையை வழங்கும் நிறுவனத்துடன் இணைந்து பார்க் ஏர் நிறுவனத்தை துவங்கியுள்ளது. இந்த நிறுவனம் நாய்களுக்கும், அதன் உரிமையாளர்களுக்கும் பிரத்யேக பயண அனுபவத்தை வழங்குகிறது.

"முந்தைய விமான பயணத்தை போன்று, இந்த நாய்களை யாரும் குறைத்து மதிப்படவோ அல்லது கார்கோ போன்றோ நடத்தவில்லை. மேலும், இவைகள் மற்ற பயணிகள் மற்றும் ஊழியர்களுக்கு தொல்லையாகவும் இருக்கவில்லை. இங்கு, நாய்களுக்குத் தான் முன்னுரிமை வழங்கப்படுகிறது. இங்குள்ள ஒவ்வொரு வசதியும், நாய்களுக்கு சவுகரியமாக இருக்குமா? என்ற அடிப்படையில் பிரத்யேகமாக உருவாக்கப்பட்டு இருக்கின்றன," என்று பார்க் ஏர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாய்கள் பயணிக்கும் இந்த விமானத்தில், அவைகளுடன் அதன் உரிமையாளர்களும் பயணம் செய்யலாம். தற்போது முதற்கட்டமாக இந்த சேவை நியூ யார்க் மற்றும் லாஸ் ஏஞ்சல்ஸ் இடையே, ஒருவழி மற்றும் இருவழி பயணமாக வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பயணத்திலும் 15 நாய்களும், அதன் உரிமையாளர்களும் பயணம் செய்யலாம்.

சவுகரியமான பயணத்தை உறுதி செய்யும் வகையில், ஒரு பயணத்தில் அதிகபட்சம் 10க்கும் மேற்பட்ட டிக்கெட்டுகள் விற்பனை செய்யப்படுவதில்லை. இந்த விமானத்தில் உள்நாட்டு பயணத்திற்கு 6 ஆயிரம் டாலர்கள், இந்திய மதிப்பில் ரூ. 4 லட்சத்து 98 ஆயிரத்து 352 என்றும் சர்வதேச பயணத்திற்கு 8 ஆயிரம் டாலர்கள் இந்திய மதிப்பில் ரூ. 6 லட்சத்து 64 ஆயிரத்து 470 என்றும் நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

## மாடியில் இருந்து கீழே விழுந்து டிக்டாக் பெண் பிரபலம் பலி



துபாய், மே. 28

ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள புஜேராவில் வசித்து வந்தவர் ஷனிபா பாபு (வயது 30). கேரளாவை சேர்ந்த இவர், டிக்டாக் பிரபலம் ஆவார். புஜேராவில் உள்ள 19வது மாடி கொண்ட அடுக்குமாடி குடியிருப்பில் கணவர் சனுஜ் பாபு மற்றும் 2 மகள்களுடன் வசித்து வந்தார்.

ஷனிபாபாபு அமீரகத்தில் வளர்ந்தவர் ஆவார். நேற்று முன்தினம் அவரது தாயார் துபாயில் இருந்து புஜேராவுக்கு மகளை பார்க்க சென்றுள்ளார். அப்போது காலை 9 மணியளவில் தனது கணவர், குழந்தைகள், தாயார் என அனைவரும் வீட்டில் இருந்த நேரத்தில் 19வது மாடி பால்கனியில் இருந்து கீழே விழுந்தார். இதன் காரணமாக தலையில் பலத்த காயம் அடைந்து ரத்த வெள்ளத்தில் அவர் உயிரிழந்தார்.

தகவல் அறிந்து விரைந்து வந்த மருத்துவ குழுவினரும் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது குறித்து புஜேரா போலீசார் வழக்கு பதிவு செய்து தற்கொலையா? என்ற கோணத்தில் விசாரணை நடத்தி வருகின்றனர். பலியான ஷனிபா பாபு கடைசியாக டிக் டாக் செயலியில் 'என்னை காதலிக்காதே', 'நான் உன் இதயத்தை உடைப்பேன்' என ரீல்ஸ் ஒன்றை பதிவிட்டு இருந்தார்.

# தோல்வி பயத்தில் நடுங்குவது குரலிலேயே தெரியுது: பாஜகவை அட்டாக் செய்த முதல்வர்

சென்னை, மே.28

தோல்வி பயத்தில் நடுங்குவதை அவர்களின் குரல் வெளிப்படுத்துகிறது என பாஜகவை மறைமுகமாக விமர்சித்துள்ளார் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின்.

நாடு முழுவதும் 7 கட்டங்களாக லோக்சபா தேர்தல் நடைபெற்று வருகிறது. ஆறு கட்டங்களாக 488 தொகுதிகளில் தேர்தல் நடைபெற்று முடிந்துள்ளது. இறுதி கட்ட தேர்தல் வரும் ஜூன் 1 ஆம் தேதி 57 தொகுதிகளில் நடைபெறுகிறது. அதைத்தொடர்ந்து ஜூன் 4ஆம் தேதி தேர்தல் முடிவுகள் வெளியாக உள்ளன.

இதற்கிடையே, தமிழ்நாட்டில் முதல் கட்டத்திலேயே வாக்குப்பதிவு முடிந்துவிட்ட நிலையில், பிரதமர் மோடி, அமித் ஷா உள்ளிட்டோர் மற்ற மாநிலங்களில் தேர்தல் பிரச்சாரம் செய்யும்போதும் திமுகவை விமர்சித்துப் பேசினர். அதற்கு திமுக தரப்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.



தமிழ்நாட்டில் தேர்தல் முடிந்த நிலையில், மற்ற மாநிலங்களில் நடைபெறும் தேர்தல் பிரச்சாரங்களின் போது பிரதமர் மோடி உள்ளிட்ட பாஜக தலைவர்கள் திமுகவை விமர்சித்து வருவதையும், இந்தியா கூட்டணி பற்றி பேசுவதையும் குறிப்பிட்டு, பாஜகவினர் தோல்வி பயத்தில் புலம்பி வருவதாக விமர்சித்துள்ளார் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின்.

திமுக தலைவரும், தமிழக முதல்வருமான ஸ்டாலின், கருணாநிதி நூற்றாண்டு விழா தொடர்பாக இன்று வெளியிட்ட கடிதத்தில் பாஜக தலைவர்களின் பேச்சுகளை விமர்சிக்கும் வகையில் கருத்து தெரிவித்துள்ளார்.

ஸ்டாலினின் கடிதத்தில், "சமூக நீதிக்கு எதிராகவும், மாநில உரிமைகளைப் பறிக்கின்ற வகையிலும், ஏழை எளிய மக்களைப் பற்றி அக்கறையில்லாதவர்களாகவும் இருக்கக்கூடிய மத வெறி அரசியல் நடத்துபவர்கள், இந்தியாவின் எந்த மாநிலத்தில் பேசினாலும் தி.மு.க மீது தாக்குதலை நடத்துகிறார்கள்.

ஜூன் 3 அன்று கலைஞர் கருணாநிதி பிறந்தநாள். ஜூன் 4 அன்று நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகின்றன. அன்றைய நாளில் வெற்றிக் கொடி ஏற்றுவோம். இந்தியா கூட்டணியின் வெற்றியைத் தலைவர் கலைஞருக்கு காணிக்கை ஆக்குவோம். தமிழ் உள்ளவரை புகழ் நிலைத்திருக்கும் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞரின் நூற்றாண்டின் தொடர்ச்சியை இந்திய அளவில் கொண்டாடுவோம்." எனத் தெரிவித்துள்ளார் முதல்வர் ஸ்டாலின்.

# தமிழை கட்டாயப் பாட மொழியாகவும், பயிற்று மொழியாகவும் உயர்த்துவதே சாதனை: ராமதாஸ்

சென்னை, மே. 28

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாட்டில் கடந்த மூன்றாண்டுகளில் தமிழ் வளர்ச்சிக்காக ஏராளமான திட்டங்கள் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டிருப்பதாகவும், அத்திட்டங்களைச் செயல்படுத்தியதற்காக தமிழக அரசை ஆன்றோரும், சான்றோரும் பாராட்டுவதாகவும் தமிழக அரசு தெரிவித்திருக்கிறது. இதை வழக்கமான மூன்றாண்டு சாதனை விளம்பரமாகக்கருதி கடந்து செல்ல முடியவில்லை. அன்னைத் தமிழ் வளர்ச்சிக்காக 25 ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டுள்ள தமிழ் பயிற்று மொழி சட்டம் போன்ற ஆக்கப்பூர்வமான திட்டங்களைச் செயல்படுத்தாமல், பெயரளவிலான திட்டங்களை மட்டும் செயல்படுத்துவதால் எந்த பயனும் இல்லை.

தமிழ்நாடு அரசின் தமிழ்வளர்ச்சித் துறையால் கடந்த மூன்றாண்டுகளில் செயல்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் தமிழறிஞர்களுக்கான விருதுகள், அறிஞர்களின் நூல்கள் நாட்டுடமை, பிறமொழி படைப்புகளை தமிழில் மொழிபெயர்த்தல், தமிழ் இருக்கைகளை அமைக்க நிதி ஒதுக்குதல் போன்ற திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருபவை தான். தமிழறிஞர்களுக்கு வீடு வழங்கும் திட்டம் என்பது ஆட்சியாளர்களுக்கு வேண்டிய சிலருக்கு மட்டும் சலுகை வழங்குவதற்கான திட்டம் ஆகும். அன்னை தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு இவை எந்த அளவுக்கு பங்களிக்கும்? என்பது பெரிய வினாக்குறி தான்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பட்டப்படிப்பு வரை தமிழ்மொழி கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டும்; முதல் கட்டமாக பள்ளிக் கல்வி வரை தமிழ் கட்டாய பயிற்று மொழியாக மாற்றப்பட வேண்டும். இந்த இரு திட்டங்கள்தான் அன்னை தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு பங்களிக்கக் கூடியவை ஆகும். தமிழ் வளர்ச்சி என்ற இலக்கிற்கு உயிர்கொடுக்கக்கூடியவை இந்த இரண்டும் தான். இவற்றை செயல்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்காமல், பிற விளம்பரத் திட்டங்களை செயல்படுத்துவதும், அவற்றை சாதனையாக காட்டிக் கொள்வதும் உயிரற்ற உடலுக்கு செய்யப்படும் அலங்காரமாகவே பார்க்கப்படும்.



தமிழ்நாட்டில் அனைத்துப் பள்ளிகளிலும் குறைந்தபட்சம் 8ம் வகுப்பு வரை தமிழை கட்டாய பயிற்று மொழியாக அறிவித்து சட்டம் இயற்ற வேண்டும் என்று வலியுறுத்தி கடந்த 1999ம் ஆண்டு ஏப்ரல் 25ம் தேதி முதல் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 102 தமிழறிஞர்கள் சாகும்வரை உண்ணாநிலைப் போராட்டம் நடத்தினர். அவர்களின் கோரிக்கையை ஏற்பதாகக் கூறிய அப்போதைய கலைஞர் அரசு, எட்டாம் வகுப்புக்கு மாற்றாக ஐந்தாம் வகுப்பு வரை தமிழைக் கட்டாய பயிற்றுமொழியாக அறிவித்து அரசாணை பிறப்பித்தது. வலிமையான சட்டம் கொண்டுவர வேண்டும் என்று தமிழறிஞர்கள் வலியுறுத்திய நிலையில், வலிமையற்ற அரசாணையை மட்டுமே 19.11.1999ம் நாளில் அரசு பிறப்பித்தது. அந்த ஆணை செல்லாது என்று அடுத்த சில மாதங்களில் சென்னை ஐகோர்ட்டு தீர்ப்பளித்தது. உடனடியாக அந்தத் தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் தி.மு.க. அரசு மேல்முறையீடு செய்தது. அதன்பின் 25 ஆண்டுகளாகி விட்ட நிலையில், அந்த வழக்கை விசாரணைக்கு கொண்டு வருவதற்கோ, தமிழைக் கட்டாயப் பயிற்றுமொழியாக அறிவித்து சட்டம் இயற்றவோ தமிழகத்தை ஆண்ட கட்சிகள் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

அதேபோல், எனது தொடர் வலியுறுத்தலின் காரணமாக அனைத்துப் பள்ளிகளிலும் பத்தாம் வகுப்பு வரை தமிழைக் கட்டாயப் பாடமாக்கும் சட்டத்தை 09.06.2006ம் நாள் சட்டப்பேரவையில் கொண்டு வந்து கலைஞர் அரசு நிறைவேற்றியது.

அச்சட்டத்தின்படி 2006ம் ஆண்டில் ஒன்றாம் வகுப்பு, 2007ம் ஆண்டில் இரண்டாம் வகுப்பு என படிப்படியாக தமிழ் கட்டாயப் பாடமாக்கப்பட்டு 201516ம் ஆண்டில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விலும் தமிழ் கட்டாயப் பாடமாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அதன்பிறகு மேலும் பத்தாண்டுகள் ஆகிவிட்ட போதிலும் இன்னும் தமிழ் கட்டாயப்பாடமாக்கப் படவில்லை. இதற்குக் காரணம் சில தனியார் பள்ளிகள் சுப்ரீம் கோர்ட்டு வரை சென்று தொடர்ந்த வழக்குகள்தான்.

தமிழ்க் கட்டாயப் பாடச் சட்டத்தின் செயல்பாடு கடந்த பத்தாண்டுகளாக முடக்கி வைக்கப்பட்டிருக்கும் நிலையில், அதை அகற்ற தமிழக அரசு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். சென்னை ஐகோர்ட்டில் இந்த வழக்கின் விசாரணை முடிந்து சுப்ரீம் கோர்ட்டில் இப்போது நிலுவையில் உள்ளது. கடந்த 2023ம் ஆண்டு தொடக்கத்தில் இந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு வந்த போது, போதிய காலம் இல்லாததால் 2023 24ம் ஆண்டில் தமிழ்க் கட்டாயப் பாடச் சட்டத்தை செயல்படுத்த தடை விதித்த சுப்ரீம் கோர்ட்டு, கோடை விடுமுறைக்கு பின் கடந்த ஆண்டு ஜூலை மாதம் இறுதி விசாரணை நடத்தப்படும் என்று அறிவித்தது. ஆனால், சுப்ரீம் கோர்ட்டுக்கு அடுத்த கோடை விடுமுறையே வந்து விட்ட போதிலும் அந்த வழக்கை விசாரணைக்கு கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால், 202425ம் ஆண்டிலும் தமிழ்மொழி கட்டாயப்பாடச் சட்டத்தை தமிழகத்தில் நிறைவேற்ற வாய்ப்பில்லை.

கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களின் பெயர்ப்பலகைகளை தமிழ்மொழியில் எழுதுவதை உறுதி செய்ய வேண்டும் என்று 30 ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறேன். இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி கடந்த ஆண்டு சென்னை முதல் மதுரை வரை தமிழைத் தேடி என்ற தலைப்பில் பயணம் மேற்கொண்டேன். ஆனாலும் அவ்வப்போது வணிகர்களுக்கு வேண்டுகோள் விடுப்பதைத் தவிர பெயர்ப்பலகைகளில் தமிழைக் கட்டாயமாக்க தமிழ்வளர்ச்சித் துறை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாதது கண்டிக்கத்தக்கது.

தமிழ்வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய முதன்மை நடவடிக்கைகள் தமிழ் பயிற்று மொழி, தமிழ்க் கட்டாயப்பாட மொழி, கடைகளின் பெயர்ப்பலகைகளில் தமிழ் ஆகியவற்றை உறுதி செய்வதுதான். தமிழ் வளர்ச்சியில் சாதனை படைத்து விட்டதாக வெற்று விளம்பரங்கள் செய்வதைத் தவிர்த்து, தமிழ் வளர்ச்சிக்கான ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தொழில் நிறுவனங்கள் வாங்கும் மின்சாரத்திற்கு கூடுதலாக வரி விதிக்கும் திட்டத்தை கைவிட வேண்டும்: அன்புமணி வலியுறுத்தல்

சென்னை, மே. 28

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இந்திய அளவிலான மின்சார சந்தையில் இருந்தும், தனியார் மின்சார உற்பத்தியாளர்களிடம் இருந்தும் தொழில் நிறுவனங்கள் வாங்கும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு கட்டணம் மற்றும் வரியாக ஏற்கனவே வசூலிக்கப்படும் ரூ.1.96 காசுகளுடன் கூடுதல் வரியாக 34 காசுகள் சேர்த்து வசூலிக்க தமிழ்நாடு மின்சார வாரியம் முடிவு செய்திருக்கிறது. இதற்காக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை விற்பனை ஆணையத்திடம் மின்சார வாரியம் விண்ணப்பித்திருக்கிறது. மின்சார வாரியத்தின் இந்த நடவடிக்கை கண்டிக்கத்தக்கது. எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது ஆகும். மின்சாரக்கொள்முதல் செலவு அதிகரித்து இருப்பது, மின்சார வாரியத்தில் நடைபெறும் ஊழல்கள் ஆகியவை தான் இழப்புக்கான முதன்மைக்காரணம் என்று கூறப்படும் நிலையில், அதை சரி செய்யாமல் மின்சாரக்கட்டணத்தை உயர்த்துவது, தனியாரிடம் வாங்கும் மின்சாரத்திற்கும் கூடுதல் வரி விதிப்பது என தொழில் நிறுவனங்கள் மீது பொருளாதாரத் தாக்குதல்களை தமிழக அரசு தொடுப்பது கண்டிக்கத்தக்கது. எனவே அந்த திட்டத்தை கைவிட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# சிறுமியிடம் சில்மிஷத்தில் ஈடுபட்ட முதியவர் கைது

சங்ககிரி, மே. 28

சேலம் மாவட்டம் தேவூர் பகுதியை சேர்ந்தவர் மாரியப்பன் (வயது 75). கூலித் தொழிலாளி. இவர், தெருக்குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்த 13 வயது சிறுமியை நைசாக வீட்டுக்குள் அழைத்து சென்று சில்மிஷத்தில் ஈடுபட்டதாகவும், பாலியல் தொல்லை கொடுத்ததாகவும் கூறப்படுகிறது. இதனால் அந்த சிறுமி அழுது கொண்டே பெற்றோரிடம் கூறியு ள்ளார். அதிர்ச்சியடைந்த சிறுமியின் பெற்றோர், இது குறித்து அளித்த புகாரின் அடிப்படையில் சங்ககிரி அனைத்து மகளிர் போலீசார் வழக்குப்பதிவு செய்து மாரியப்பனை கைது செய்தனர்.

# ஓடும் ரெயிலில் குடி போதையில் ரகளை: 2 பேரை பிடித்து ரெயில்வே போலீசார் விசாரணை



திருப்பூர், மே. 28

ஓடும் ரெயிலில் குடி போதையில் ரகளையில் ஈடுபட்டு பயணிகளுக்கு கொலைமிரட்டல்விடுத்த ஆசாமிகள் 2 பேரை பிடித்து திருப்பூர் ரெயில்வே போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இது பற்றி போலீஸ் தரப்பில் கூறப்படுவதாவது:

சென்னையைச் சேர்ந்தவர் மணிகண்டன் (வயது 30). இவர் கோவையில் உள்ள தனது சகோதரி வீட்டுக்கு செல்வதற்காக சென்னையில் இருந்து ஆலப்புழா செல்லும் ரெயிலில் நேற்று முன்தினம் இரவு ஏறி குடும்பத்துடன் எஸ்.9 முன் பதிவு பெட்டியில் பயணம் செய்தார். அதிகாலை 3 மணி அளவில் ஈரோடு ரெயில் நிலையத்துக்கு அந்த ரெயில் வந்தடைந்தது.

அப்போது வாலிபர்கள் 4 பேர் எஸ்.9 பெட்டியில் ஏறி சத்தம் போட்டு, புகை பிடித்தபடி வந்தனர். அவர்கள் திடீர் ரகளையில் ஈடுபட்டதால் அந்தப் பெட்டியில்தூங்கிக்கொண்டிருந்த பயணிகளுக்கு இடையூறு ஏற்பட்டது. அந்த வாலிபர்கள் போதையில் இருந்ததாக கூறப்படுகிறது. இது குறித்து அந்த பெட்டியில் பயணம் செய்த மணிகண்டன் தட்டி கேட்டார். அப்போது அந்த இளைஞர்களுக்கும், மணிகண்டனுக்கும் இடையே வாக்குவாதம்ஏற்பட்டது.பின்னர் அந்த 4 வாலிபர்களும் சேர்ந்து மணிகண்டனை தாக்கியதுடன் கொலை மிரட்டல் விடுத்து தகராறில் ஈடுபட்டனர். இதை தட்டி கேட்ட மணிகண்டனின் சகோதரிக்கும் கொலை மிரட்டல் விடுத்தனர்.

இதைத்தொடர்ந்து 3.45 மணிக்கு ரெயில் திருப்பூர் ரெயில் நிலையம் வந்தடைந்தது. அந்த 4 வாலிபர்களும் ரெயிலில் இருந்து இறங்கி தப்பி ஓடிவிட்டனர்.

ஓடும் ரெயிலில் பயணிகளுக்கு கொலை மிரட்டல் விடுத்து தகராறில் ஈடுபட்ட வீடியோ காட்சிகள் சமூக வலைதளத்தில் பரவியதால் பரபரப்பு ஏற்பட்டது.

இது குறித்து மணிகண்டன் திருப்பூர் ரெயில்வே போலீசில் புகார் செய்தார். ரெயில்வே துணை போலீஸ் சூப்பிரண்டு யாஸ்மின், இன்ஸ்பெக்டர் தனலட்சுமி தலைமையிலான போலீசார் இது குறித்து விசாரணை நடத்தினார்கள். இந்த நிலையில் இது தொடர்பாக திருப்பூரை சேர்ந்த 2 வாலிபர்களை ரெயில்வே போலீசார் பிடித்து விசாரித்து வருகிறார்கள்.

# சொத்து பிரச்சினையில் ஆத்திரம்: இளம்பெண்ணை பெட்ரோல் ஊற்றி எரித்துக்கொன்ற மாமனார்





ராமநாதபுரம், மே.28

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகே உள்ள முத்து விஜயபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் ஜேசு (வயது 70). இவரது மகன் ஆரோக்கிய பிரபாகரன் (36). இவரும் தட்டான் குடியிருப்பு கிராமத்தைச்சேர்ந்த உமாவும் (32) காதலித்து திருமணம் செய்து கொண்டனர். இவர்களுக்கு மரிய ஜெலினா (11), ஜெமி தெரசா (7) என 2 மகள்கள் இருந்தனர்.

இந்நிலையில் கடந்த ஆண்டு மஞ்சள் காமாலை நோயால் ஆரோக்கிய பிரபாகரனும், இளைய மகள் ஜெமி தெரசாவும் இறந்து விட்டனர். இதனால் உமாவும், தனது மூத்த மகள் மரிய ஜெலினாவும் தனது கணவர் வீட்டில் வசித்து வந்தார்.

இந்தநிலையில் மாமனார் ஜேசு, சொத்து பிரச்சினையில் உமாவை வீட்டை விட்டு வெளியேற்றியதாக கூறப்படுகிறது. பின்னர் கிராம பெரியோர்கள் உமா மற்றும் ஜேசுவிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். அதன் காரணமாக மீண்டும் உமா மட்டும் தனது கணவர் வீட்டில் வசித்தார்.

அவரது மகள் மரிய ஜெலினாஉமாவின்தந்தை வீட்டில் இருந்தார்.

இந்நிலையில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு தன் தந்தை ஜெயராஜிடம் உமா செல்போனில் பேசியுள்ளார். அப்போது மாமனார் ஜேசு, தன்னை பெட்ரோல் ஊற்றி கொல்ல முயற்சிக்கிறார் என கூறியுள்ளார். இதையடுத்து ஜெயராஜ், முத்து விஜயபுரம் வீட்டில் வந்து பார்த்த போது உமா தீயில் கருகி பலத்த காயங்களுடன் கிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். உடனடியாக அவரை மீட்டு சிகிச்சைக்காக ராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தார். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி இறந்தார்.

இந்த சம்பவம் குறித்து கீழத்தூவல் போலீசார் முதல் கட்டமாக தற்கொலை என வழக்கு பதிவு செய்தனர். பின்னர் இது தொடர்பாக ஜேசுவிடம் நடத்திய விசாரணையில், சொத்து பிரச்சினையில் உமா மீது பெட்ரோல் ஊற்றி தீ வைத்து எரித்து கொன்றதாக அவர் தெரிவித்தார். இதைத்தொடர்ந்து கீழத்தூவல் இன்ஸ்பெக்டர் இளங்கோவன், ஜேசு மீது கொலை வழக்கு பதிந்து அவரை கைது செய்து மதுரை சிறையில் அடைத்தனர்.

தீக்காயங்களுடன் ராமநாதபுரம் அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட உமா, அங்கிருந்தவர்களிடம் தன்னை மாமனார் ஜேசுதான் பெட்ரோல் ஊற்றி தீ வைத்தார். இதில் படுகாயம் அடைந்துள்ளேன் என தெரிவித்தார்.

ஆனால் போலீசார் முதல் கட்டமாக தற்கொலை செய்து கொள்வதற்காகவே உமா, பெட்ரோல் ஊற்றி தீவைத்ததாக வழக்குபதிவு செய்தனர். போலீசார் இந்த விவகாரத்தில் அலட்சியமாக விசாரித்து உள்ளனர். பின்னர் இந்த விவகாரம் தீவிரமானதால்தான் உமாவின் மாமனாரை பிடித்து விசாரித்து, கொலை வழக்காக மாற்றியுள்ளனர் என அப்பகுதியினர் தெரிவித்தனர்.

# திருமணம் முடிந்த மறுநாள் நகை, பணத்துடன் புதுப்பெண் ஓட்டம்

மதுரை, மே. 28

மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்தவர் டிரைவராக வேலை செய்கிறார். இவருக்கு திருமணமாகி, குழந்தை இல்லாததால் முதல் மனைவியை விவாகரத்து செய்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் பெண் புரோக்கர் மூலம் 2வது திருமணத்துக்கு பெண் பார்த்தனர். அதன்படி அவருக்கு 2வது திருமணம் நடந்துள்ளது.

மறுநாள் கணவன்மனைவி இருவரும் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு சென்றனர். அப்போது டிரைவருக்கு செல்போனில் அழைப்பு வந்தது.

இதனால் அவர் மனைவியிடம் இருந்து சிறிது தூரம் தள்ளி நின்று போனில் பேசினார். திரும்பி வந்து பார்த்த போது தனது 2வது மனைவியை காணவில்லை. அக்கம்பக்கத்தில் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. 2வது மனைவிக்கு டிரைவர் தனது சொந்த செலவில் தங்கநகை வாங்கி அணிவித்து இருந்தார். ரொக்கப் பணத்தையும் அவரிடம் கொடுத்து இருந்தார். அந்த நகை, பணத்துடன் புதுப் பெண் தப்பி ஓடிவிட்டதாக தெரிகிறது.

இதனால் தனக்கு 2வது திருமணம் செய்து வைத்த பெண் புரோக்கரை செல்போன் மூலம் டிரைவர் தொடர்பு கொள்ள முயன்றார்.

ஆனால் அவருடைய செல்போன் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டு இருந்தது. அப்போது, புரோக்கரும், அந்த பெண்ணும் தன்னை திருமணம் செய்வது போல நடித்து ஏமாற்றி விட்டார்களோ என விரக்தி அடைந்த அவர், போலீசில் இதுவரைபுகார் எதுவும் தெரிவிக்கவில்லை.

# சாலையின் நடுவில் உள்ள தடுப்புச் சுவரின் மீது பைக் ஓட்டி சாகசத்தில் ஈடுபட்ட இளைஞரால் பரபரப்பு வைரலாகும் வீடியோ




திருச்சி, மே.28

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் சதய விழா கொண்டாடப்பட்டது. இதையொட்டி, திருச்சி ஒத்தக்கடையில் அமைந்துள்ள முத்தரையர் சிலைக்கு பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள், பல்வேறு அமைப்பை சேர்ந்தவர்கள் என ஏராளமானோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். மேலும் பல்வேறு ஊர்களிலிருந்து ஏராளமான இளைஞர்கள் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் ஊர்வலமாக வந்தனர். அதில் பலர் இருசக்கர வாகனங்களில் வீலிங் செய்து சாகசங்களில் ஈடுபட்டு போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தினர். அந்த வகையில், கொள்ளிடம் ஆற்றின் பாலத்தில் சாலையின் நடுவில் உள்ள தடுப்புச் சுவர் மீது இளைஞர் ஒருவர் தனது இருசக்கர வாகனத்தை ஓட்டி சாகசத்தில் ஈடுபட்டார். அதனை இருபுறமும் வாகனத்தில் சென்ற பிற இளைஞர்கள் செல்போனில் பதிவு செய்தனர். இது தொடர்பான வீடியோ காட்சிகள் தற்போது சமூக வலைதளத்தில் அதிகம் பகிரப்பட்டு வருகின்றன.

போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தியும், பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் அவரை ஏன் கண்டு கொள்ளவில்லை, அவர் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கேள்வியை பொதுமக்கள் முன் வைத்துள்ளனர். வீடியோ வைரலானதைத் தொடர்ந்து தடுப்புச் சுவர் மீது வாகனம் ஓட்டிய இளைஞர் யார் என்று போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# காதலுக்கு எதிர்ப்பு: 2 வாரங்களில் திருமணம்; வீட்டை விட்டு வெளியேறி காதலனை கரம்பிடித்த கல்லூரி மாணவி



தர்மபுரி, மே.28

தர்மபுரி மாவட்டம் காரிமங்கலம் அக்ரஹார தெருவை சேர்ந்தவர் செல்வகுமார். சிப்ஸ் கடை நடத்தி வருகிறார். இவருடைய மகள் ஜோதி பிரியா (வயது 22). தர்மபுரியில் உள்ள தனியார் கல்லூரியில் பி.ஏ. 3ம் ஆண்டு படித்து வருகிறார். இவரும், மாட்லாம்பட்டியை சேர்ந்த துணி வியாபாரி செல்வகுமார்(24) என்பவரும் கடந்த 2 ஆண்டுகளாக காதலித்து வந்தனர்.

இவர்களுடைய காதலுக்கு ஜோதி பிரியா குடும்பத்தினர்எதிர்ப்பு தெரிவித்ததோடு, கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த ஒருவருடன் ஜோதி பிரியாவிற்கு திருமணம் நடத்த நிச்சயம் செய்தனர். இந்த திருமணம் இன்னும் 2 வாரங்களில் நடைபெற இருந்தது. இருதரப்பு வீட்டாரும் திருமண ஏற்பாடுகளை விறுவிறுப்பாக செய்து வந்தனர்.

எனினும் ஜோதி பிரியா திருமணத்தில் விருப்பம் இல்லாமல் காதலனிடம் திருமணம் குறித்து கூறினார். இதனால் வீட்டை விட்டு வெளியேறிய காதல் ஜோடி கோவை மருதமலை முருகன் கோவிலில் திருமணம் செய்து கொண்டனர். மகளை காணாததால் செல்வகுமார் இதுதொடர்பாக காரிமங்கலம் போலீசில் புகார் கொடுத்திருந்தார்.

இதனை அறிந்த காதல் தம்பதி நேற்று தங்களுக்கு பாதுகாப்பு கேட்டு காரிமங்கலம் போலீஸ் நிலையத்தில் தஞ்சம் அடைந்தனர். இதையடுத்து போலீசார் இருதரப்பு பெற்றோர்களையும் அழைத்து சமாதான பேச்சு வார்த்தை நடத்தினர். தொடர்ந்து ஜோதி பிரியாவை காதல் கணவர் செல்வகுமாருடன் பாதுகாப்பாக அனுப்பி வைத்தனர்.

இது ஒருபுறம் இருக்க நிச்சயிக்கப்பட்ட திருமணம் நின்றதால் கிருஷ்ணகிரியை சேர்ந்த மாப்பிள்ளை வீட்டார், பெண் வீட்டாரிடம் தகராறில் ஈடுபட்டனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# பெற்றோரை இழந்த பெண்... திருமணத்திற்கு முன்பே பிறந்த குழந்தை... அடுத்து நடந்த பரபரப்பு சம்பவம்



பட்டுக்கோட்டை, மே. 28

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே உள்ள வலசக்காடு கிராமத்தை சேர்ந்தவர் கருணாகரன். இவரது மகள் ஹரிபிரியா(வயது 20). ஹரிபிரியாவின் தாய் அனிதாஏற்கனவே இறந்துவிட்டார். தந்தையும் 2 ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். பெற்றோர் இறந்துவிட்டதையடுத்து ஹரிபிரியா, தனது பெரியப்பா பாஸ்கரன் ஆதரவில் இருந்து வந்தார்.

இந்த நிலையில் பக்கத்து கிராமமான வலசேரிக்காடு கிராமத்தை சேர்ந்த நாகலிங்கம் மகன் பிரகாசுக்கும், ஹரிபிரியாவுக்கும் நட்பு ஏற்பட்டது. பின்னர் இந்த நட்பு காதலாக மாறி இருவரும் நெருக்கமாக பழகி வந்தனர். இதனால் கர்ப்பமான ஹரிபிரியாவுக்கு கடந்த ஆண்டு ஜூன் மாதம் பெண் குழந்தை பிறந்தது.

ஹரிபிரியாவுக்கு பிறந்த குழந்தை தனக்கு பிறந்தது இல்லை என கூறி ஹரிபிரியாவை விட்டு பிரகாஷ் விலகினார். இதுகுறித்து பட்டுக்கோட்டை மகளிர் போலீஸ் நிலையத்தில் ஹரிபிரியா புகார் செய்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து டி.என்.ஏ. பரிசோதனை செய்ய உத்தரவிட்டனர். இதையடுத்து நடத்தப்பட்ட டி.என்.ஏ. பரிசோதனையில் ஹரிபிரியாவுக்கு பிறந்த குழந்தையின் டி.என்.ஏ.வும், பிரகாசின் டி.என்.ஏ.வும் ஒன்றாக இருந்தது. இதையடுத்து பிரகாசை மகளிர் போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

சமீபத்தில் ஜாமீனில் வெளிவந்த பிரகாஷ், வேறொரு பெண்ணை திருமணம் செய்ய இருப்பதாக ஹரிபிரியாவுக்கு தகவல் வந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த ஹரிபிரியா, நேற்று பட்டுக்கோட்டை மகளிர் போலீஸ் நிலையத்தின் முன்பு காதலனுடன் தன்னை சேர்த்து வைக்கக்கோரி தனது கைக்குழந்தையுடன் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார்.

தகவல் அறிந்ததும் பட்டுக்கோட்டை துணை போலீஸ் சூப்பிரண்டு பாஸ்கர் சம்பவ இடத்திற்கு வந்து ஹரிபிரியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போதுபிரகாஷ் மீது நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்ததின் பேரில் ஹரிபிரியா தர்ணா போராட்டத்தை கைவிட்டார்.

ஹரிபிரியாவின் இந்த தர்ணா போராட்டத்தால் மகளிர் போலீஸ் நிலையம் 1 மணி நேரத்துக்கும் மேலாக பரபரப்பாக காணப்பட்டது.

# வளர்ப்பு நாய் கடித்து தொழிலாளி சாவு திருப்பூரில் பரபரப்பு



திருப்பூர், மே. 28

திருப்பூர் மாவட்டம் வெள்ளகோவில் உப்புப் பாளையம் சாலை அரசு நூலகம் பின்புறத்தில் வசித்து வந்தவர் முனுசாமி (வயது 42). கட்டிட தொழிலாளி. இவருடைய மனைவி சித்ரா (39), இவர்களுக்கு திலகவதி (20), திவ்யா (15) என்ற 2 மகள்களும், பரத் (12) என்ற மகனும் உள்ளனர். கடந்த 3 மாதங்களுக்கு முன்பு மைசூருவில் நடந்த உறவினர் இல்ல நிகழ்ச்சிக்கு குடும்பத்துடன் சென்றுள்ளனர். பின்னர் மனைவி, குழந்தைகள், வெள்ளகோவில் திரும்பிவிட 3 நாட்கள் கழித்து முனுசாமி வந்துள்ளார். மைசூருவில் உறவினர் வீட்டு வளர்ப்பு நாய் கால்களால் தொற்றியதில் முனுசாமிக்கு கால்களில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டுள்ளது. வேறு உடல் நிலை தொந்தரவு அறிகுறி எதுவும் இல்லை. கடந்த வாரம் வெள்ளகோவிலில் முனுசாமி வீட்டில் வளர்த்து வந்த நாய் அவருடைய காலில் கடித்து விட்டது. இதையடுத்து அந்த நாய் இறந்துவிட்டது. இதற்கிடையில் முனுசாமிக்கு மூச்சு இறைச்சல், அதிக தண்ணீர் தாகம் ஏற்பட்டு வெள்ளகோவில் தனியார் மருத்துவமனைக்கு சென்றுள்ளார். மருத்துவர் அறிவுரையின் பேரில் கரூர் அரசு தலைமை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றுள்ளார். அப்போது 2 தடவை நாய் கடித்ததாக டாக்டரிடம் கூறினார். பரிசோதனையில் வெறி நோய் பாதிப்பு உறுதி செய்யப்பட்டு திருச்சி அரசு தலைமை மருத்துவமனை சிறப்பு பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதையடுத்து அவருடைய குடும்பத்தினருக்கு வெறிநோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. வளர்ப்பு நாய் கடித்த பின் அதை கண்டுகொள்ளாததால் தொழிலாளி உயிரிழந்த சம்பவம் மற்றவர்களுக்கு ஒரு பாடத்தை ஏற்படுத்தி உள்ளது.

# பிறந்து சில மணி நேரமான ஆண் குழந்தை முட்புதரில் இருந்து மீட்பு

திருச்சி, மே. 28

திருச்சி மாவட்டம் கோட்டை பகுதியில் தேவதானம் ரெயில்வே கேட் அருகில் உள்ள முட்புதர் முன்பு நேற்று மதியம் 1 மணி அளவில் பூசாரி தெருவை சேர்ந்த அம்மு (வயது 28) மற்றும் வளர்மதி (38) ஆகியோர் குப்பை மற்றும் பழைய பிளாஸ்டிக் பொருட்களை எடுக்க சென்றனர்.

அப்போது அந்த பகுதியில் பிறந்து சில மணி நேரமே ஆன ஆண் குழந்தை ஒன்று உயிருடன் கிடந்ததை பார்த்து அதிர்ச்சியடைந்தனர். இது குறித்து உடனடியாக அவர்கள் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். மேலும் இ.பி. ரோட்டில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் அந்த குழந்தையை அனுமதித்தனர். அங்கு குழந்தைக்கு முதலுதவி அளிக்கப்பட்டது.

இது பற்றி ரோந்து பணியில் இருந்த போலீசார், அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். அவர்களின் உத்தரவின்பேரில் சைல்டு லைன் (1098) மேற்பார்வையாளர் பிரியா, திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலக அதிகாரிகள் புகழேந்தி, கோபு உள்ளிட்ட பணியாளர்களிடம் அந்த குழந்தை ஒப்படைக்கப்பட்டது. அந்த குழந்தையை முட்புதர் பகுதியில் வீசிச்சென்றது யார்? என்பது குறித்து கோட்டை போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அரசு வேலை வாங்கி தருவதாக ரூ.9 லட்சம் மோசடி: தம்பதி கைது





சென்னை, மே. 28

அரியலூரைச் சேர்ந்த தினேஷ் குமார் என்பவர், தனக்கு நிச்சயமான பெண்ணுக்கு அரசு வேலை கிடைப்பதற்காக மோகன் என்பவரை அணுகியுள்ளார்.

இதற்காக தினேஷிடம் 9 லட்சம் ரூபாய் பெற்றுக் கொண்ட மோகன், பணி நியமன ஆணையை கொடுத்துள்ளார். இந்த நிலையில் அந்த பணி நியமன ஆணை போலி என்று தெரிய வந்ததையடுத்து, தினேஷ் குமார் சென்னை யானை கவுனி காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

இதையடுத்து இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்திய போலீசார், மற்றொரு நபருக்கு போலி நியமன ஆணை கொடுக்க முயன்ற மோகன் மற்றும் அவரது மனைவி கவுசல்யாவை கைது செய்தனர். மேலும், அவர்களிடம் இருந்து 34 போலி பணி நியமன ஆணைகள், 48 அரசு முத்திரைகள்,

8 போலி அடையாள அட்டைகள் உள்ளிட்டவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர்.

# கோவில் கட்ட நிலம் வழங்கி, கும்பாபிஷேகத்திற்கு சீர்வரிசை எடுத்து வந்த இஸ்லாமியர்கள்.. திருப்பூரில் நெகிழ்ச்சி



திருப்பூர், மே. 28

திருப்பூர் மாவட்டம் காங்கயம் தாலுகா கணபதி பாளையம் ஊராட்சி ஒட்டப்பாளையம் கிராமத்தில் ரோஸ் கார்டன் பகுதியில் 300க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இந்தப் பகுதியில் இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் என அனைத்து சமுதாயத்தினரும் ஒன்றாக வசித்து வரும் நிலையில் இப்பகுதியில் முஸ்லிம்கள் தொழுகை நடத்த பள்ளி வாசல் உள்ளது. ஆனால் இந்துக்கள் வழிபாடு செய்ய கோவில் இல்லாத நிலையில் கோவில் ஒன்று கட்ட வேண்டும் என எண்ணிய மக்கள் அதற்கு போதுமான இடம் இல்லாத சூழ்நிலையில் நிலம் தேடி வந்தனர்.

இச்செய்தியை அறிந்த அப்பகுதி முஸ்லிம்கள் ஆர்.எம்.ஜே. ரோஸ் கார்டன் முஸ்லிம் ஜமாத் பள்ளிவாசலுக்கு சொந்தமான ரூ.6 லட்சம் மதிப்பிலான 3 சென்ட் நிலத்தை கோவில் கட்ட தானமாக வழங்கியுள்ளனர். தற்போது அனைத்து பகுதிகளிலும் சாதி, மதம் என இன பாகுபாடுகள் மூலம் பலரும் பிரிந்து கிடக்கும் சூழலில் அனைவரும் மனிதர்கள், எல்லோரும் சமம், எல்லோரும் சகோதரர்கள் என சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் உணர்த்தும் விதமாக முஸ்லிம்கள் தங்களது நிலத்தை தானமாக வழங்கியது அனைவரையும் நெகிழ்ச்சி அடைய செய்துள்ளது.

அந்த இடத்தில் கோவில் கட்டும் பணி தற்போது நிறைவடைந்து கோவில் கும்பாபிஷேகமும் நடைபெறும் நிலையில் முஸ்லிம்கள் பள்ளிவாசலில் இருந்து 7 தட்டுகளில் சீர்வரிசை எடுத்துக் கொண்டு மேளதாளம் முழங்க ஊர்வலமாக வந்து கோவிலுக்கு மேலும் பெருமை சேர்த்துள்ளனர். அப்போது முஸ்லிம்களுக்கு கோவில் நிர்வாகம் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. மேலும் இக்கோவில் விழாவில் அன்னதான ஏற்பாடுகள் செய்யப்பட்டு அனைவருக்கும் வழங்கப்பட்டது. இச்சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் சந்தோஷத்தையும், மனிதர்களின் நல்ல குணங்களையும் போற்றும் வகையில் அமைந்தது. இந்த நிகழ்ச்சி இதுதான் தமிழ்நாடு என்று நிரூபித்து உள்ளது.

# முல்லைப்பெரியாறு அணை விவகாரம் கேரள அரசை கண்டித்து விவசாயிகள் போராட்டம்



கூடலூர், மே. 28

தமிழககேரள எல்லையில் அமைந்துள்ள முல்லைப்பெரியாறு அணை தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்ட மக்களின் ஜீவாதார பிரச்சனையாக உள்ளது. 152 அடி உயரமுள்ள இந்த அணையில் தற்போது உச்சநீதிமன்ற உத்தரவுப்படி 142 அடி வரை தண்ணீர் தேக்கப்பட்டு வருகிறது.

முல்லைப்பெரியாறு அணை 130 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது என்பதால் பலமிழந்து விட்டது என்றும், அணையை இடித்து புதிய அணை கட்ட வேண்டும் என கடந்த 40 ஆண்டுகளாக தொடர்ந்து பிரசாரம் செய்து வருகிறது.

இது குறித்து உச்சநீதி மன்றம் வல்லுனர் குழுவை அமைத்து அணை பலமாக உள்ளது. இதனால் அருகில் உள்ள பேபி அணையை பலப்படுத்திய பின்பு கூடுதல் தண்ணீர் தேக்கிக் கொள்ளலாம் என உத்தரவிட்டது.

இந்நிலையில்தான் கடந்த ஜனவரி மாதம் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்துக்கு கேரள அரசு கடிதம் எழுதி புதிய அணை கட்ட இருப்பதால் அதற்கு அனுமதி வழங்க வேண்டும் என தெரிவித்தது. கேரள அரசின் மனு மீது நாளை (28ந் தேதி) விசாரணை நடைபெறுகிறது. 11 பேர் கொண்ட குழுவினர் இந்த மனு மீது விசாரணை நடத்த உள்ளனர்.

கேரள அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து 5 மாவட்ட விவசாயிகள் இன்று தேனி மாவட்டம் லோயர்கேம்ப்பில் போராட்டம் நடத்தப்போவதாக தெரிவித்தனர். பேரணியாக சென்று பென்னிகுவிக் நினைவு மண்டபத்தில் அஞ்சலி செலுத்தி பின்னர் கேரள எல்லையான குமுளியில் முற்றுகை போராட்டம் நடத்தப்படும் என தெரிவித்தனர். இதனால் தமிழககேரள எல்லைப்பகுதியான குமுளி நெடுஞ்சாலையில் நேற்று இரவு முதல் போலீசார் குவிக்கப்பட்டனர். இன்று காலை லோயர் கேம்ப் பஸ் நிலையத்தில் முல்லைப்பெரியாறு, வைகை பாசன விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பாளர் அன்வர் பாலசிங்கம் தலைமையில் விவசாயிகள் சங்க தலைவர் பொன்காட்சி கண்ணன் முன்னிலையில் திரண்ட விவசாயிகள் அங்கிருந்து பென்னிகுவிக் மணிமண்டபத்துக்கு சென்றனர். அதன் பின்பு பேரணியாக செல்ல முயன்ற போது அவர்களை போலீசார் தடுத்து நிறுத்தினர். அப்போது கேரள அரசுக்கு எதிராக விவசாயிகள் கண்டன கோஷங்களை எழுப்பினர். விவசாயிகளை அங்கிருந்து அப்புறப்படுத்திய போலீசார் தனியார் மண்டபத்துக்கு அழைத்துச் சென்றனர்.

இது குறித்து முல்லைப் பெரியாறு, வைகை பாசன விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பாளர் அன்வர் பாலசிங்கம் கூறுகையில், கேரளாவில் எந்த அரசு அமைந்தாலும் முல்லைப் பெரியாறு அணைக்கு எதிராக செயல்படுவதை வாடிக்கையாக வைத்துள்ளனர். கடந்த சட்டசபை தொடரின் போதே கேரள அரசு புதிய அணை கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்தது. அப்போது தமிழக அரசு கண்டுகொள்ளாமல் இருந்து விட்டது. உச்சநீதிமன்றத்தில் வழங்கிய தீர்ப்பையே மதிக்காதது கேரள அரசு. சிலந்தி ஆற்றின் குறுக்கே கேரள அரசு அணைக்கட்டி வந்த போது பசுமைத்தீர்ப்பாயம் தாமாக முன்வந்து அதனை தடுத்து நிறுத்தியுள்ளது. அதே போல உச்சநீதிமன்றம் உத்தரவுப்படி புதிய அணை கட்ட முடியாது என்று தெரிந்தும் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திடம் கேரள அரசு மனு அளித்துள்ளது. எனவே உச்சநீதிமன்றமும் தாமாக முன்வந்து கேரள அரசுக்கு உரிய அறிவுரைகளை வழங்க வேண்டும்.

இதற்கு பின்பும் முல்லைப்பெரியாறு அணையை வைத்து கேரளா அரசியல் செய்தால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றார்.

# பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கை; தரவரிசை பட்டியல் கல்லூரிகளுக்கு அனுப்பிவைப்பு



சென்னை, மே. 28

தமிழக உயர்கல்வித்துறையின் கீழ் 164 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இந்த கல்லூரிகளில், 1.07 லட்சம் பட்டப்படிப்பு இடங்கள் உள்ளன. இதற்கான, 202425ம் கல்வியாண்டு மாணவர் சேர்க்கை ஆன்லைன் விண்ணப்ப பதிவு, கடந்த 6ந் தேதி முதல் 24ந் தேதி வரை நடைபெற்றது. இதில், 2 லட்சத்து 28 ஆயிரத்து 527 விண்ணப்பங்கள் குவிந்தன. 2 லட்சத்து 11 ஆயிரத்து 10 மாணவர்கள் விண்ணப்ப கட்டணம் செலுத்தினார்கள்.

இதற்கிடையே அரசு கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பு முதலாம் ஆண்டு மாணவர் சேர்க்கை கலந்தாய்வுக்கான தரவரிசை பட்டியல், அந்தந்த கல்லூரிகளுக்கு இன்று அனுப்பிவைக்கப்படுகின்றன. கல்லூரிகள், தரவரிசை பட்டியலில் உள்ள மாணவ, மாணவிகளுக்கு கலந்தாய்வு தேதி தொடர்பான விவரங்களை 'வாட்ஸ் அப்' வாயிலாக தெரிவிக்க ஏற்பாடுகள் செய்துள்ளன. முதல்கட்டமாக, நாளை (செவ்வாய்கிழமை) முதல் வருகிற 30ந் தேதி (வியாழக்கிழமை) வரை மாற்றுத்திறனாளிகள், விளையாட்டுவீரர்கள், முன்னாள் ராணுவத்தினர் ஆகிய மாணவர்களுக்கான சிறப்பு ஒதுக்கீடு கலந்தாய்வு நடைபெற உள்ளது.

அதன் தொடர்ச்சியாக, அடுத்த மாதம் (ஜூன்) 10ந் தேதி முதல் 15ந் தேதி வரை பொதுப்பிரிவினருக்கான முதல்கட்ட கலந்தாய்வு நடைபெறுகிறது. 2ம் கட்ட பொதுப்பிரிவு கலந்தாய்வு அடுத்த மாதம் 24ந் தேதி முதல் 29ந் தேதி வரை நடைபெறும். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கலந்தாய்வில் பட்டப்படிப்புக்கான மாணவர் சேர்க்கை ஆணை பெற்ற மாணவர்களுக்கான முதலாம் ஆண்டு வகுப்புகள் வருகிற ஜூலை மாதம் 3ந் தேதி தொடங்குகிறது.

# ஜூன் 4ந்தேதி பா.ஜ.க. வெற்றி கொண்டாட்டத்துக்கு இப்போதே தயாராகுங்கள்: அண்ணாமலை




சென்னை, மே. 28

தமிழகம், புதுச்சேரியில் உள்ள 40 பாராளுமன்ற தொகுதிகளுக்கு கடந்த மாதம் 19ந்தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப்பட்டது.

இந்த தேர்தலில் தி.மு.க. கூட்டணி, அ.தி.மு.க. கூட்டணி, பா.ஜ.க. கூட்டணி இடையே மும்முனை பலப்பரீட்சை நிலவியது. பாரதிய ஜனதா தலைமையிலான கூட்டணியில் 19 தொகுதிகளில் பாரதிய ஜனதாவும் மற்ற தொகுதிகளில் அதன் தோழமை கட்சிகளும் போட்டியிட்டன.

40 தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம் என்று தி.மு.க. தலைவர்கள் நம்பிக்கையுடன் கூறி வருகிறார்கள். ஆனால் இந்த தடவை தமிழகத்தில் பாரதிய ஜனதா மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று அந்த கட்சி தலைவர்கள் சொல்லி வருகிறார்கள்.

பாரதிய ஜனதா கட்சி சார்பில் பாராளுமன்ற தேர்தலின் போது மிகப்பெரிய அளவில் ஒவ்வொரு தொகுதியிலும் பணம் செலவழிக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது. குறிப்பாக கட்சி மேலிடம் சார்பில் தேர்தல் பணிகளில் ஈடுபட்ட பூத் கமிட்டி நிர்வாகிகளுக்காக ஒவ்வொரு தொகுதியிலும் கணிசமான தொகை வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது.

தேர்தல் முடிந்த நிலையில் தமிழக பாரதிய ஜனதாவில் சர்ச்சை வெடித்தது. தொகுதிகளில் செலவு செய்ய வழங்கப்பட்ட பணத்தை முக்கிய நிர்வாகிகள் பலர் லட்சக்கணக்கில் பதுக்கி முறைகேடுகள் செய்து விட்டதாக பரபரப்பாக பேசப்பட்டது. இது தொடர்பாக பாரதிய ஜனதா மேலிட தலைவர்களும் விசாரணை நடத்தி வருவதாக தகவல்கள் வெளியானது.

தமிழக பாரதிய ஜனதா தலைவர் அண்ணாமலை தமிழகத்தில் தேர்தல் முடிந்ததும் மற்ற மாநிலங்களில் பிரசாரம் செய்வதற்காக சென்று விட்டார். தற்போது அவரது வெளிமாநில தேர்தல் பிரசார பயண திட்டம் நிறைவு பெற்று விட்டது.

இந்த நிலையில் பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகளின் ஆலோசனை கூட்டத்துக்கு அண்ணாமலை அழைப்பு விடுத்தார். மாநில பொறுப்பாளர்கள், பாராளுமன்ற தொகுதி பொறுப்பாளர்கள், மாவட்ட தலைவர்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதை ஏற்று தமிழகம் முழுவதிலும் இருந்து பா.ஜ.க. நிர்வாகிகள் சென்னை வந்தனர்.

தமிழகத்தில் பாரதிய ஜனதா கட்சி அமைப்பு ரீதியாக 66 மாவட்டங்களாக செயல்பட்டு வருகிறது. இந்த மாவட்டங்கள் 8 பெரும் கோட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் கட்சி நிர்வாகம் நடந்து வருகிறது.

இந்த நிர்வாகத்தில் உள்ள அனைத்து தலைவர்களும் ஆலோசனை கூட்டத்துக்காக சென்னை வந்தனர்.

மேலும் பாரதிய ஜனதா சார்பில் தமிழகத்தில் போட்டியிட்ட 19 வேட்பாளர்கள், கட்சியின் பல்வேறு அணிகளின் நிர்வாகிகள் ஆகியோரும் ஆலோசனை கூட்டத்துக்கு அழைக்கப்பட்டனர். இன்று காலை 9.30 மணிக்கு சென்னை அமைந்தகரையில் இந்த ஆலோசனை கூட்டம் தொடங்கியது.

கூட்டத்தில் மேலிட இணை பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி, மாநில துணைத் தலைவர் கரு. நாகராஜன், மாநில செயலாளர் கராத்தே தியாகராஜன், பா.ஜ.க. வேட்பாளர்கள் டாக்டர் தமிழிசை சவுந்தர ராஜன், பால்கனகராஜ், வினோஜ் செல்வம், பொன் பாலகணபதி, மூத்த தலைவர் எச்.ராஜா உள்பட முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர். கூட்டத்தில் பா.ஜனதா தலைவர் அண்ணாமலை பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

பிரதமர் மோடி தலைமையில் மத்தியில் மீண்டும் பாரதிய ஜனதா ஆட்சி அமையப் போகிறது. அதை எந்த சக்தியாலும் தடுக்க இயலாது.

காங்கிரஸ் கூட்டணி கட்சியினர் மாய உலகிலும், கனவுகளிலும் மிதந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களது கனவு ஜூன் 4ந்தேதி தகர்ந்து விடும். நாடு முழுவதும் பாரதிய ஜனதா கட்சி அமோக வெற்றி பெறுவதை 4ந்தேதி பார்க்க போகிறீர்கள்.

எனவே தமிழக பாரதிய ஜனதா நிர்வாகிகள் அனைவரும் ஜூன் 4ந்தேதி வெற்றி கொண்டாட்டத்துக்கு இப்போதே தயாராகுங்கள். ஒவ்வொரு ஊரிலும் பாரதிய ஜனதாவின் வெற்றி சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுங்கள்.

ஒட்டு மொத்த இந்தியாவிலும் பல கட்சிகள் பிரதமர் மோடியை எதிர்க்கின்றன. ஆனால் பிரதமர் மோடி நாட்டு மக்களை நம்பி களத்தில் உள்ளார். நமது வெற்றியை யாராலும் ஒருபோதும் தடுத்து நிறுத்த இயலாது.

காங்கிரஸ் கட்சி தலைவர்கள் தாங்கள் எத்தனை தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என்று இது வரை சொல்ல இயலவில்லை. ஆனால் பாரதிய ஜனதாவை 400 தொகுதிகளில் வெற்றி பெற விட மாட்டோம் என்று மட்டுமே சொல்லி வருகி றார்கள்.

சரி போகட்டும். நாங்கள் 399 இடங்களில் வெற்றி பெறுவோம்.

தமிழகத்தில் பாரதிய ஜனதாவும் தோழமை கட்சிகளும் போட்டியிட்ட 39 தொகுதிகளில் பாரதிய ஜனதாவின் தொண்டர்கள் அயராது பாடுபட்டார்கள். ஒவ்வொரு தொகுதியிலும் சாதாரண அடிமட்ட தொண்டர்கள் முதல் தலைவர்கள் வரை கடுமையாக உழைத்தார்கள்.

அவர்கள் ஒவ்வொருவருக்கும் எனது நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஜூன் 4ந்தேதிக்கு பிறகு அவர்களுக்கான உழைப்பின் பலனை காணப் போகிறார்கள்.

தற்போது வடக்கு, தெற்கு என்று பேசுகிறார்கள். ஜூன் 4ந்தேதிக்கு பிறகு இந்த பிரிவினை இருக்காது. வட மாநிலங்களுக்கு இணையாக தென் மாநிலங்களிலும் பாரதிய ஜனதாவுக்கு ஆதரவு இருப்பதை அனைவரும் பார்க்கப் போகிறார்கள்.

இவ்வாறு அண்ணாமலை பேசினார்.

மேலும் தேர்தலுக்கு பிறகு தமிழக பாரதிய ஜனதா எப்படி செயல்பட வேண்டும் என்பது குறித்தும் அவர் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டார்.

அண்ணாமலையை தொடர்ந்து தமிழக பா.ஜனதா மூத்த தலைவர்களும் பேசினார்கள். அப்போது பலரும் பெரும் கோட்ட பொறுப்பாளர்கள் சரியாக செயல்படவில்லை என்று அதிருப்தி தெரிவித்தனர். கட்சி பணிகளை திறம்பட செய்யும் வகையில் 66 மாவட்டங்களின் அமைப்பிலும் அதிரடி மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டன.

ஏற்கனவே மாவட்ட அளவில் பா.ஜ.க. நிர்வாகிகளின் செயல்பாடுகளில் தொய்வு இருப்பதாக டெல்லி மேலிட தலைவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது. எனவே மாநில நிர்வாகிகள், பெரும் கோட்ட நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் அளவில் பலரை மாற்றுவது குறித்து ஆலோசிக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

கட்சி அமைப்பில் அதிரடி மாற்றங்களை செய்ய அண்ணாமலைக்கு பா.ஜ.க. மேலிட தலைவர்கள் அதிகாரம் வழங்கி இருப்பதாகவும் கூறப்படுகிறது. எனவே தமிழகத்தில் பாரதிய ஜனதாவை மேலும் வலுப்படுத்தும் வகையில் இன்றைய கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சிலந்தி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்படுவதை கண்டித்து விவசாயிகள் விசிக ஆர்ப்பாட்டம்




தாராபுரம், மே. 28

திருப்பூர் மாவட்டம் உடுமலையை அடுத்த மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமராவதி அணை கட்டப்பட்டு உள்ளது. இந்த அணைக்கு கேரளா மற்றும் தமிழக வனப்பகுதியில் உற்பத்தியாகின்ற சின்னாறு, தேனாறு, பாம்பாறு, சிலந்தி ஆறு உள்ளிட்ட ஆறுகள் மற்றும் சிறு சிறு ஓடைகள் மூலமாக மழைக்காலங்களில் நீர் வரத்து ஏற்படுகிறது. அதை ஆதாரமாக கொண்டு திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டத்தில் 54 ஆயிரத்து 637 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகிறது.

கூட்டுக்குடிநீர்திட்டங்களும் செயல்படுத்தப்படுகிறது.

இந்தநிலையில் கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம் தேவிகுளம் தாலுகாவில் உள்ள வட்டவடா கிராம ஊராட்சி எல்லைக்கு உட்பட்ட பெருகுடா பகுதியில் அமராவதி அணையின் பிரதான நீர்வரத்தான சிலந்தி ஆற்றை தடுத்து கேரளா அரசு தடுப்பணை கட்டும் பணியை மேற்கொண்டு வருகிறது. இதனால் அமராவதி அணைக்கு நீர்வரத்து தடுக்கப்படுவதுடன், அணையை ஆதாரமாக கொண்ட பாசன நிலங்கள் பாலைவனமாகும் சூழலுக்குதள்ளப்பட்டுள்ளது.

எனவே தடுப்பணை கட்டும் பணியை தடுத்து நிறுத்த கோரி தமிழக விவசாயிகள் போராட்டத்தை தொடங்கி உள்ளனர்.

திருப்பூர் மாவட்டம் உடுமலை தாலுகா அமராவதி அருகே தமிழககேரள எல்லை அருகே சின்னாறு சோதனை சாவடியை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். இதில் 6 பெண்கள் உட்பட 130 பேரை போலீசார் கைது செய்தனர்.

இந்தநிலையில் தடுப்பணை கட்டும் கேரள அரசை கண்டித்து தாராபுரம் அண்ணாசிலை முன்பு இன்று விவசாயிகள் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் திருப்பூர் கிழக்கு மாவட்ட செயலாளர் ஓவியர் மின்னல் தலைமை தாங்கினார். விவசாயிகள், விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் 200க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். அவர்கள் கேரள அரசை கண்டித்து கோஷம் எழுப்பினர்.

இது குறித்து விடுதலை சிறுத்தைகள் கட்சியின் விவசாய பாதுகாப்பு இயக்கத்தின் மாநில துணை செயலாளர் வேலு சிவகுமார் கூறியதாவது:

அமராவதி அணைக்கு வந்து சேர வேண்டிய தண்ணீரை கேரள அரசு தடுத்து அணை கட்டி வருவது உண்மைதான். எனது தலைமையில் விவசாயிகள் அடங்கிய குழு நேரில் ஆய்வு செய்து அதனை உறுதி செய்துள்ளோம்.

குடிநீர் தேவைக்கு என்ற காரணத்தை கூறி அங்கு அணை கட்டப்படுகிறது. ஆனால் உண்மை நிலை அதற்கு மாறாக உள்ளது.

தடுப்பணையின் அருகிலேயே மிகப்பெரிய அளவிலான கார்ப்பரேட் நிறுவனத்தின் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் தயாரிப்பு ஆலை உள்ளது. அந்த ஆலையின் தேவைக்காக அமராவதிக்கு வரும் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்பட்டு வருகிறது.

இந்த தடுப்பணையை தாண்டி ஒரு சொட்டுநீர் கூட அமராவதி அணைக்கு வராது. இது போன்ற கேரளாவின் செயல்பாடுகளால் அமராவதி அணை விரைவில் பாலைவனமாவதையும் தமிழக அரசால் தடுக்க முடியாது. கேரளத்தின் இந்த செயலை கண்டித்து இன்று ஆர்ப்பாட்டம் நடத்தி உள்ளோம் என்றார்.

# சவுக்கு சங்கர் ஜாமின் மனு மீதான விசாரணை 30ந்தேதிக்கு ஒத்திவைப்பு



மதுரை, மே. 28

பிரபல யூடியூபர் சவுக்கு சங்கர் சமீபத்தில் ஒரு யூடியூப் சேனலுக்கு அளித்த பேட்டியில், பெண் போலீசார் குறித்தும், போலீஸ் அதிகாரிகள் பற்றியும் பாலியல் தொடர்பான அவதூறு கருத்துகளை தெரிவித்து இருந்ததாக பல்வேறு புகார்கள் எழுந்தன.

இதையடுத்து அவர் மீது கோவை சைபர் கிரைம் போலீசார் வழக்குபதிவு செய்து, தேனியில் உள்ள தனியார் விடுதியில் தங்கி இருந்த சவுக்கு சங்கரை கடந்த 4ந்தேதி அதிகாலையில் கைது செய்தனர். பின்னர் கோர்ட்டில் ஆஜர்படுத்திய போலீசார் அவரை கோவை மத்திய சிறையில் அடைத்தனர்.

இதேபோல தேனியில் அவர், தனது உதவியாளர் மற்றும் டிரைவருடன் தங்கியிருந்த விடுதியில் கஞ்சா பதுக்கியதாக பழனிசெட்டிபட்டி போலீசார் வழக்குப் பதிவு செய்தனர். அந்த வழக்கில் சவுக்கு சங்கரை கைது செய்து, மதுரை மாவட்ட கோர்ட்டில் போலீசார் ஆஜர்படுத்தினர்.

இந்தநிலையில் அந்த வழக்கில் தனக்கு ஜாமின் கேட்டு மதுரை போதைப் பொருள் தடுப்பு சிறப்பு கோர்ட்டில் சவுக்கு சங்கர் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனு நீதிபதி செங்கமலச்செல்வன் முன்பு இன்று விசாரணைக்கு வந்தது.

அப்போது சவுக்கு சங்கர் தரப்பு வக்கீல் இன்று ஆஜராகவில்லை. கோவையில் மற்றொரு வழக்கில் ஆஜராக செல்வதால் கால அவகாசம் கோரப்பட்டது. மேலும் கஞ்சா வைத்திருந்ததாக தொடரப்பட்ட வழக்கில் சவுக்கு சங்கருக்கு ஜாமின் வழங்க கூடாது என கூறி குறிஞ்சியர் பெண்கள் ஜனநாயக பேரவை பவானி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதை நீதி பதி ஏற்றுக்கொண்டார். இதையடுத்து இந்த மனு மீதான விசாரணையை வருகிற 30ந்தேதிக்கு ஒத்தி வைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

# படையப்பா உடன் இணையும் கட்டப்பா



இயக்குனர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் நடிகர் ரஜினிகாந்த் நடிப்பில் உருவாகி வரும் திரைப்படம் 'கூலி'. இந்த திரைப்படத்தினை பிரபல தயாரிப்பு நிறுவனமான சன் பிக்ச்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. படத்திற்கு இசையமைப்பாளர் அனிருத் இசையமைத்து வருகிறார்.

இந்த கூலி படத்தின் டீசரில் இதற்கு முன்பு ரஜினிகாந்த் நடிப்பில் வெளியான 'தங்கமகன்' படத்தில் இடம்பெற்று இருந்த 'வா வா பக்கம் வா' என்ற பாடலின் இசை இடம்பெற்று இருந்தது. 'தங்கமகன்' படத்திற்கு இசையமைப்பாளர் இளையராஜாதான் இசையமைத்து இருந்தார். இதனையடுத்து தன்னுடைய அனுமதி இல்லாமல் அந்த இசையை கூலி டீசரில் பயன்படுத்தி இருப்பதாக படத்தின் தயாரிப்பு நிறுவனத்திற்கு நோட்டீஸ் அனுப்பியிருந்தார். கூலி டீசரில் இடம் பெற்று இருக்கும் 'வா வா பக்கம் வா' என்ற பாடலின் இசையை பயன்படுத்த உரிய அனுமதி வாங்கவேண்டும். அப்படி வாங்கவில்லை என்றால் அந்த டீசரில் இருந்து அந்த இசையை நீக்க வேண்டும். அப்படி எதுவும் செய்யாத பட்சத்தில், சம்பந்தப்பட்ட அனைவர் மீதும் சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ள தங்களுக்கு அனைத்து உரிமைகளும் இருப்பதாகவும் அந்த நோட்டிசில் இளையராஜா தரப்பில் தெரிவிக்கப்பட்டு இருந்தது. இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது. இந்நிலையில், கூலி படத்தில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்துடன் நடிகர் சத்யராஜ் இணைய உள்ளதாக கூறப்படுகிறது. ரஜினியுடன் சத்யராஜ் நடிப்பதாக வெளியான தகவலால் ரசிகர்கள் கொண்டாட்டத்தில் உள்ளனர். இப்படத்தில் வில்லன் கதாபாத்திரத்தில் சத்யராஜ் நடிக்கவில்லை என்றும் ரஜினிகாந்தின் நண்பராக நடிப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. முன்னதாக, 1986ல் எஸ். பி. முத்துராமன் இயக்கத்தில் நடிகர் ரஜினிகாந்த் நடிப்பில் வெளியான 'மிஸ்டர் பாரத்' படம் பெரும் வரவேற்பை பெற்றது. இப்படத்தில் சத்யராஜ், அம்பிகா, கவுண்டமணி, எஸ்.வி.சேகர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். இப்படத்தில் சத்யராஜ் வில்லன் கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். ரஜினிகாந்த் சத்யராஜ் கூட்டணி இப்படத்திற்கு பலத்தை கொடுத்தது. 'என்னம்மா கண்ணு சௌக்கியமா...' என்ற பாடல் பெரும் வரவேற்பினை பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# கொக்கி குமாரு is an எமோஷன் தனுஷ் நெகிழ்ச்சி



திரையுலகில் நடிகர், இயக்குநர், பாடலாசிரியர் என பன்முகத் தன்மை கொண்டவர் தனுஷ். இவர் நடிப்பில் உருவாகும் 50 ஆவது திரைப்படம் ராயன். இதனை இவரே இயக்கியுள்ளார். ஏ.ஆர். ரகுமான் இசையமைத்துள்ள ராயன் படம் வருகிற ஜூன் 13 ஆம் தேதி வெளியாக இருக்கிறது. சமீபத்தில் இந்த படத்தின் பாடல்கள் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றன.

தனுஷ் ஆரம்பக்கட்டத்தில் நடித்து வெளியான படம் "புதுப் பேட்டை." இயக்குநரும், நடிகர் தனுஷின் சகோதரருமான செல்வராகவன் இயக்கிய புதுப்பேட்டை படத்தில் தனுஷ் கேங்ஸ்டர் வேடத்தில் நடித்திருப்பார். இந்த படம் விமர்சன ரீதியில் பெரும் வரவேற்பை பெற்றது. மேலும், இந்த படத்தின் இரண்டாம் பாகம் எப்போது வெளியாகும் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது. இந்த நிலையில், புதுப்பேட்டை படம் வெளியாகி 18 ஆண்டுகள் நிறைவு செய்ததை ஒட்டி, நடிகர் தனுஷ் தனது எக்ஸ் தளத்தில் படம் குறித்து பதிவிட்டுள்ளார். அதில், "ஒரு நடிகருக்கு திரை பயணத்தில் சில கதாபாத்திரங்கள் மட்டும்தான் அழுத்தமானதாக அமையும். இதுபோன்ற கதாபாத்திரம் தான் கொக்கி குமார். இப்படி ஒரு கதாபாத்திரத்தை கொடுத்த செல்வராகவனுக்கு நன்றி. நான் அதை சிறப்பாக செய்ய வேண்டும் என்று மட்டுமே விரும்பினேன். கொக்கி குமார் ஒரு எமோஷன்," என்று குறிப்பிட்டுள்ளார்.

# வருத்தப்படாத வாலிபர் சங்கம் 2 வெளியான புது தகவல்

தமிழ் திரையுலகில் லிப்ட், டாடா மற்றும் ஸ்டார் என தொடர்ந்து வெற்றி படங்களை கொடுத்தவர் நடிகர் கவின். சின்னத்திரையில் இருந்து வெள்ளித்திரைக்கு வந்துள்ள நடிகர் கவின் அடுத்தடுத்து புதிய படங்களில் நடிக்க ஒப்பந்தமாகி வருகிறார். சமீபத்தில் இவர் நடிப்பில் வெளியான ஸ்டார் திரைப்படம் மக்கள் மத்தியில் வரவேற்பு பெற்றது. அந்த வரிசையில், ஸ்டார் படத்தை தொடர்ந்து இயக்குநர் நெல்சன் தயாரிக்கும் பிளடி பகர் படத்திலும், அருண் இயக்கும் ஊர் குருவி படத்திலும் நடிக்க இருக்கிறார். அதைத்தொடர்ந்து 7 ஸ்கிரீன் நிறுவனம் தயாரிக்கும் அடுத்த படத்தில் ஒப்பந்தமாகியுள்ளார். ஆண்டிரியா இப்படத்தில் கேங்ஸ்டராக நடிக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் 2013 ஆம் ஆண்டு சிவகார்த்திகேயன் நடிப்பில் பொன்ராம் இயக்கத்தில் வெளிவந்த வருத்தப்படாத வாலிபர் சங்கம் திரைப்படம். சிவகார்த்திகேயன் திரைவாழ்வில் மிக முக்கியமான திரைப்படமாக இது அமைந்தது. அதைதொடர்ந்து பொன்ராமின் இயக்கத்தில் சீமராஜா, ரஜினி முருகன் திரைப்படத்தில் நடித்தார். தற்பொழுது பொன்ராம் கவினை வைத்து அடுத்து படம் இயக்க போவதாக தகவல் வெளியாகியுள்ளது.

கவினிடம் கிராமத்து பின்னணி கதைக்களத்துடன் ஒரு கதையை கூறியுள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. இப்படம் வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் இரண்டாம் பாகமாக இருக்குமோ என கேள்வி எழுந்துள்ளது இதுகுறித்து அதிகாரப்பூர்வ தகவல் விரைவில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கபடுகிறது.

# இந்தியன் 2 படத்தின் அடுத்த சிங்கிள் அப்டேட்




28 ஆண்டுகளுக்கு பிறகு ஷங்கர் இயக்கத்தில் நடிகர் கமல்ஹாசன் 'இந்தியன் 2' படத்தில் நடித்துள்ளார். இப்படத்தில் கமலுக்கு ஜோடியாக பிரியா பவானி சங்கர், காஜல் அகர்வால், ரகுல் ப்ரீத் சிங், சித்தார்த், பாபி சிம்ஹா, சமுத்திரக்கனி என பலர் நடித்துள்ளனர். இப்படத்திற்கு அனிருத் இசையமைத்து உள்ளார். லைகா மற்றும் ரெட் ஜெயண்ட் நிறுவனம் இணைந்து இப்படத்தை தயாரித்துள்ளது. இந்தியன் 2ம் பாகத்தை குறித்து சுவாரசியமான தகவல் வெளியாகியுள்ளது. திரைப்படம் வரும் ஜூலை மாதம் 12 ஆம் தேதி வெளியாகவுள்ளது. படத்தின் முதல் பாடலான `பாரா பாரா' பாடல் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்ற நிலையில். படத்தின் அடுத்த பாடலை மே 29 ஆம் தேதி வெளியிடப் போவதாக படக்குழுவினர் அறிவித்துள்ளனர். இது குறித்து போஸ்டர் ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில் சித்தார்த் மற்றும் ரகுல் ப்ரீத் சிங் ஒரு கஃபேவில் அமர்ந்தபடி காட்சிகள் இடம்பெற்றுள்ளது. இந்த பாடல் ரொமேண்டிக் பாடலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. படத்டின் இசை வெளியீட்டு விழா வரும் ஜூன் 1 ஆம் தேதி மிக பிரம்மாண்டமாக நடக்கவிருக்கிறது. படத்தின் முதல் பாகம் போலவே இப்படமும் வெற்றிப்பெரும் என எதிர்பார்க்கப் படுகிறது. இதைதொடர்ந்து படத்தின் மூன்றாம் பாகமும் வெளியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'GOAT' படத்தின் புதிய அப்டேட் கொடுத்த இசையமைப்பாளர்



நடிகர் விஜயின் 68வது படமான 'கிரேட்டஸ்ட் ஆப் ஆல் டைம்ஸ்' (G.O.A.T.) படத்தை இயக்குனர் வெங்கட் பிரபு இயக்கி வருகிறார். இப்படத்தில் நடிகர்கள் ஜெயராம், பிரபுதேவா, மோகன், பிரஷாந்த், வைபவ், சினேகா, லைலா, மீனாட்சி சௌத்ரி ஆகியோர் நடித்துள்ளனர். ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார்.

இப்படம் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு செப்டம்பர் 5ந்தேதி இப்படம் தியேட்டர்களில் 'ரிலீஸ்' செய்யப்படும் என படக்குழு அறிவித்தது. இப்படத்தின் பெரும்பாலான காட்சிகள் வெளிநாடுகளில் படமாக்கப்பட்டது.

இந்நிலையில், இப்படத்தின் புதிய அப்டேட்டை இசையமைப்பாளர் யுவன் சங்கர் ராஜா கொடுத்துள்ளார்.

விஜய் ஏற்கனவே தான் நடித்த சில படங்களில் ஒரு சில பாடல்களை பாடியுள்ளார். அந்த வகையில் 'GOAT' படத்தில் 2 பாடல்களை பாடியுள்ளார். இதனால் விஜய் ரசிகர்கள் மிகுந்த உற்சாகத்தில் உள்ளனர்.

விஜய் தான் நடித்த படங்களில் பாடியுள்ள பாடல்கள் விவரம்: ரசிகன் படத்தில் 'பம்பாய் சிட்டி சுக்கா ரொட்டி வித்தாப்பாரு செவத்த குட்டி'

தேவா படத்தில் 'கோத்தகிரி குப்பம்மா... கோவப்பட்டா தப்பம்மா...'

காலமெல்லாம் காத்திருப்பேன் படத்தில் 'அஞ்சா நம்பர் பஸ்ஸில் ஏறி தந்தானக்குயிலே...'

காதலுக்கு மரியாதை படத்தில் 'விழியில் விழி மோதி இதயக் கதவு இன்று திறந்ததே.. இரவு பகலாக; இதயம் கிளியாகிப் பறந்ததே...' பிரியமுடன் படத்தில் 'மௌரியா மௌரியா மனசுக்குள்ள வாறியா மௌரியா மௌரியா மனசுக்குள்ள வாறியா ஒரு ஸ்டிக்கர் பொட்டு போல நான் ஒட்டிக்கனும் மேல'

நிலாவே வா படத்தில் 'நிலவே நிலவே, நிலவே நிலவே நில்லு நில்லு திறவாய் மொழிகள் சொல்லு'

பத்ரி படத்தில் 'என்னோட லைலா வராளே மெயிலா சிக்னலே கெடைக்கல கெடைக்கல'

உள்ளத்தை கிள்ளாதே படத்தில் 'உள்ளத்தை கிள்ளாதே கிள்ளி விட்டு செல்லாதே....'

துப்பாக்கி படத்தில் 'கூகுள் கூகுள் பண்ணி பாத்தேன் உலகத்துல...'

தலைவா படத்தில் 'வாங்கனா வணக்கங்கனா... மை சாங்க நீ கேளுங்கண்ணா நா...'



ஜில்லா படத்தில் 'கண்டாங்கி... கண்டாங்கி...கட்டி வந்த பொண்ணு...'

கத்தி படத்தில் 'செல்பி புள்ள... செல்ஃபி புள்ள...'

தெறி படத்தில் 'ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு செல்லா குட்டியே...'

பைரவா படத்தில் 'பாப்பா... பாப்பா... பப்பரப்பா...'

பிகில் படத்தில் 'நெஞ்சுக்குள்ள குடி இருக்கும் நம்ம சனம் வெறித்தனம்

மாஸ்டர் படத்தில் 'குட்டி ஸ்டோரி...'

பீஸ்ட் படத்தில் 'ஜாலியோ ஜிம்கானா...'

பிரியமானவளே, புலி போன்ற படங்களில் தனது குரலில் பாடி ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளார். அதேபோல் 'GOAT' படத்திலும் விஜய் பாடியுள்ள பாடல்களை எதிர்நோக்கி ரசிகர்கள் காத்து உள்ளனர்.

# கேகேஆர் வெற்றியால் கோடிகளில் பரிசு வென்ற பிரபல ராப் பாடகர்



ஐபிஎல் 2024 இறுதிப் போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத்தை வீழ்த்தி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் தனது 3வது ஐபிஎல் பட்டத்தை வென்றது.

113 ரன்களுக்கு ஐதராபாத் அணியை வீழ்த்தி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 10.3 ஓவர்களில் 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று, ஐபிஎல் போப்பையை தன் வசமாக்கியது.

இந்த வெற்றி கொல்கத்தா அணியின் பத்து ஆண்டு கால எதிர்பார்ப்பபை பூர்த்தி செய்தது. கொல்கத்தா அணியின் வெற்றி கனடிய பாடகர் ராப்பர் டிரேக்கிற்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கிராமி விருது பெற்ற ராப்பர் டிரேக், ஐபிஎல் 2024 இறுதிப் போட்டியில் கொல்கத்தா அணிக்கு ஆதரவாக 250,000 அமெரிக்க டாலர்கள் பந்தயம் (இந்திய ரூபாய் மதிப்பில் ரூ.2 கோடி ) வென்று இந்திய மதிப்பில் சுமார் ரூ. 3.73 கோடி பரிசை வென்றுள்ளார்.


கிரிக்கெட் பந்தயத்தில் டிரேக்கின் முதல் முயற்சி இதுவாகும். இதற்கு முன்பு கூடைப்பந்து, அமெரிக்க கால்பந்து மற்றும் ரக்பியில் பந்தயம் கட்டியிருக்கிறார்.

முன்னதாக, 37 வயதான கலைஞர் தனது பந்தய சீட்டை இன்ஸ்டாகிராமில் பகிர்ந்து கொண்டார். டிரேக் தனது இன்ஸ்டாகிராம் ஸ்டோரியில், "எனது முதல் கிரிக்கெட் பந்தயத்தை கொல்கத்தா மீது வைக்கிறேன்" என்று படத்துடன் குறிப்பிட்டிருந்தார்.

போட்டியில் கொல்கத்தா வென்றதால், டிரேக்கும் தனது பந்தயத்தை வென்று கோடியில் வென்றுள்ளார்.

இந்திய மதிப்பில் சுமார் ரூ.2 கோடி பந்தயம் கட்டி, டிரேக் இப்போது சுமார் ரூ.3.73 கோடியை பெற்றுள்ளார். இதன் மூலம், டிரேக் சுமார் 1.7 கோடி லாபத்தை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இடது பக்கம் நின்றால் ஐபிஎல் கோப்பை 2019 முதல் அரங்கேறிய அதிசய நிகழ்வு




ஐபிஎல் தொடரின் 17வது சீசனின் இறுதி போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று இரவு நடைபெற்றது. இதில் கொல்கத்தா ஐதராபாத் அணிகள் மோதின. இந்த போட்டியில் கொல்கத்தா அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று ஐபிஎல் கோப்பை கைப்பற்றியது. இதன்மூலம் கொல்கத்தா அணி 3வது முறையாக ஐபிஎல் கோப்பையை வென்று சாதனை படைத்துள்ளது.

இந்நிலையில் 2019 முதல் 2024 வரை இறுதி போட்டியில் இடது பக்கத்தில் நின்ற அணியே ஐபிஎல் கோப்பையை வென்றுள்ளது. இது தொடர்பானதகவல்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இந்த தகவலுடன் ஒரு புகைப்படமும் டிரெண்டாகி வருகிறது.

அந்த வகையில் 2019ம் ஆண்டு சென்னை மும்பை அணிகள் மோதின. இதில் ரோகித் சர்மா இடது புறமும் டோனி வலது புறமும் இருந்தார். இறுதியில் ரோகித் கோப்பையை தட்டி சென்றார்.

அதேபோல 2020ம் ஆண்டு மும்பை டெல்லி மோதின. இதிலும் ரோகித் இடது புறம் நின்றார் கோப்பையை வென்றார். 2021ல் சென்னை கொல்கத்தா அணிகள் மோதின. இதில் இடது புறம் டோனி நின்றார் கோப்பையை வென்றார்.

இப்படி 2024 வரை இடது புறம் நின்ற அணியே கோப்பை வென்ற அதிசய நிகழ்வு நடைபெற்றுள்ளது. மேலும் 2019 முதல் குவாலிபையர் முதல் சுற்றில் வெற்றி பெற்ற அணியே கோப்பையை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# டி20 உலகக்கோப்பை தொடர்: ஜேசன் ஹோல்டர் விலகல்



டி20 உலகக்கோப்பை தொடர் அடுத்த மாதம் வெஸ்ட் இண்டீஸ் மற்றும் அமெரிக்காவில் நடைபெற உள்ளது. இந்நிலையில் இத்தொடருக்காக தற்போது ஒவ்வொரு நாட்டு கிரிக்கெட் வாரியமும் தங்களது அணிகளை அறிவித்துள்ளன.

அந்தவகையில் நடப்பு டி20 உலகக்கோப்பை தொடரை நடத்தும் முன்னாள் சாம்பியன் வெஸ்ட் இண்டீஸ் அணியும் கடந்த மாதம் அறிவிக்கப்பட்டது. அதன்படி வெஸ்ட் இண்டீஸ் அணியின் கேப்டனாக ரோவ்மன் பவல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் நடப்பு டி20 உலகக்கோப்பை தொடருக்கான வெஸ்ட் இண்டீஸ் அணியிலிருந்து நட்சத்திர ஆல் ராவுண்டர் ஜேசன் ஹோல்டர் காயம் காரணமாக தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். இதன் காரணமாக உலகக்கோப்பை தொடருக்கான வெஸ்ட் இண்டீஸ் அணியில் வேகப்பந்து வீச்சாளர் ஒபேத் மெக்காய் சேர்க்கப்பட்டுள்ளார். நடைபெற்றுவரும் தென் ஆப்பிரிக்க தொடரிலும் மெக்காய் இடம்பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

வெஸ்ட் இண்டீஸ் அணி: ரோவ்மன் பாவெல் (கேப்டன்), அல்ஸாரி ஜோசப், ஜான்சன் சார்லஸ், ரோஸ்டன் சேஸ், ஷிம்ரான் ஹெட்மையர், ஒபேத் மெக்காய், ஷாய் ஹோப், அகீல் ஹொசைன், ஷமார் ஜோசப், பிராண்டன் கிங், குடாகேஷ் மோட்டி, நிக்கோலஸ் பூரன், ஆண்ட்ரே ரஸல், ஷெர்ஃபேன் ரூதர்ஃபோர்ட், ரொமாரியோ ஷெப்ஃபர்ட்.

# பிரெஞ்சு ஓபன் டென்னிஸ்: அல்காரஸ், ரூப்லெவ் முதல் சுற்றில் வெற்றி



கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டி பாரீஸ் நகரில் நடந்துவருகிறது. தகுதிச்சுற்று முடிந்துள்ள நிலையில் முதல் சுற்றுப் போட்டிகள் இன்று தொடங்கின. இந்நிலையில், ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று போட்டியில் ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்காரஸ், அமெரிக்காவின் வுல்புடன் மோதினார். இதில் 61, 62, 61 என்ற நேர் செட் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் ரஷியாவின் ஆன்ட்ரே ரூப்லெவ், ஜப்பான் வீரர் டாரோ டேனியலுடன் மோதினார். இதில் ரூப்லெவ் முதல் செட்டை 62 என எளிதில் கைப்பற்றினார். 2வது செட்டை டாரோ 76 (73) என போராடி வென்றார். இதனால் சுதாரித்து கொண்ட ரூப்லெவ் அடுத்த இரு செட்களை 63, 75 என கைப்பற்றி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.



**ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்**
**தழுக்கா றிலாத இயல்பு**

**விளக்கம்:**

**ஒருவன் தன் நெஞ்சில் பொறாமை இல்லாமல் வாழும் இயல்பைத் தனக்கு உரிய ஒழுக்க நெறியாகக் கொண்டு போற்ற வேண்டும்.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.